### (ஊ) சென்மதி நிலுவையும் வெளிநாட்டுச் சொத்துக்களும்

பின்னிணைப்பில் உள்ள 27 முதல் 31 வரையான அட்டவணைகளில் இலங்கையின் சென்மதி நிலுவையினதும் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களினதும் விரிவான புள்ளி விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்திற்குரிய வெளிநாட்டுச் செலாவணியின் உண்மை வரவுகளினதும், கொடுப்பனவுகளினதும் நிலுவைத் தரவுகள், செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் ஏடுகளிலிருந்து பெறப்பட்டன ஆதலின், இத்தரவுகள் வெளிநாட்டு வர்த்தகம் என்ற பகுதியிற் சுங்கப் பதிவேடுகளிலிருந்து பெறப்பட்டு உபயோகிக்கப்பட்ட புள்ளிவிபரங்களிலிருந்து வேறுபாடுடையனவாக உள்ளன.

**பிரதான போக்குகள்**

1966 ஆம் ஆண்டில் இலங்கையின் சென்மதி நிலுவையின் இயக்கம் பல அம்சங்களில் 1965 ஆம் ஆண்டிற்குரிய போக்கோடு முரணுள்ளதாக அமைந்துள்ளது. 1965ஆம் ஆண்டின் சென்மதி நிலுவை, 1964ஆம் ஆண்டினதிலும்பார்க்க வணிகக் கணக்கிலும், கட்புலனாகாக் கணக்கிலும் ஒரு திருந்திய நிலையைப் பிரதிபலித்திருக்கையில், 1966ஆம் ஆண்டில் அதிற் குறிப்பிடத்தக்க சீர்கேடான நிலை காணப்பட்டது. 1965 ஆம் ஆண்டின் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களினூலான வணிகப் பொருட்கணக்கு ரூபா 1280 இலட்சம் கொண்ட மிகையைப் பிரதிபலித்ததற்கெதிராக, 1966 ஆம் ஆண்டில் ரூபா 1230 இலட்சம் கொண்ட குறை காணப்பட்டது. இதேபோல 1965 ஆம் ஆண்டில் இலங்கையின் கட்புலனாகாக் கொடுக்கல் வாங்கல்கள் (பண்ட நன்கொடைகள் தவிர்த்து) ஏறக்குறைய ரூபா 80 இலட்சம் கொண்ட மிகையைக் காட்டியதற்கெதிராக, 1966 ஆம் ஆண்டில் ரூபா 190 இலட்சம் கொண்ட குறை காணப்பட்டது. 1966 ஆம் ஆண்டில் இலங்கையின் சென்மதி நிலுவையின் வணிகக் கணக்கிலும் கட்புலனாகாக் கணக்கிலும் ஏற்பட்ட இக்குறைகளின் பயனூல் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களின் பேரில் உள்ள நடைமுறைக் கணக்கில் ரூபா 1420 இலட்சம் கொண்ட மொத்தக் குறை ஏற்பட்டது. ஒப்பியல்பாக, இவ் வர்த்தகக் கணக்குகளின் கொடுக்கல் வாங்கல்கள் 1965 ஆம் ஆண்டில் ரூபா 1360 இலட்சம் கொண்ட மிகையைக் காட்டியிருந்தன.

இலங்கையின் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் ஏற்பட்ட பாதகமான நிலைமைக்கு, 1966ம் ஆண்டின் தொடக்கத்தில் வெளிநாட்டுச் செலாவணி சம்பந்தமான வரவு செலவுத் திட்டம் வரையப்பட்டபோது எதிர்பார்க்கப்பட்ட இலக்கிலும் பார்க்க ஏற்றுமதி வருவாய்கள் ரூபா 1560 இலட்சத்தாற் கூர்மையாகக் குறைந்தமை முக்கிய காரணமாகும். 1965 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், ஏற்றுமதி வருமானத்தின் வீழ்ச்சி ஏறக்குறைய ரூபா 2350 இலட்சமாகும். ஏற்றுமதி வருமானத்தின் பாதகமான மாற்றத்துடன் இணைந்து, இறக்குமதிக் கொடுப்பனவுகள் அதிகரித்தமையாலும், அந்நிய வட்டிக் கொடுப்பனவுகள், முதலீட்டு வருமானமீட்சிகள், ஆகியன உயர்வுற்றமையாலும், பெருமளவான கொடுப்பனவுத் தொகைகள் வெளியேற்றப்பட்டன. அத்துடன் முற்காலங்களில் உத்தியோக பூர்வமான கடன்களாகவும், அந்நிய தனியார் முதலீட்டங்களாகவும் இலங்கைக்குள் வந்த மூலதன உட்பாய்வுகளின் பேரிலுள்ள கடன் குறைப்புக்காகவோ மீட்சிக்காகவோ கூடுதலான அந்நிய செலாவணிகள் தேவையாயிருந்தமை, இலங்கையின் நடைமுறைக் கணக்கிலுள்ள சென்மதி நிலுவைக் கஷ்டங்களை மேலும் அதிகரிக்கத்தக்கதாய் விளங்கிற்று. 1965இல் ரூபா 750 இலட்சமாக இருந்த இப் பொறுப்புக்கள், 1966இல் ரூபா 1140 இலட்சமாக விளங்கிற்று.

1966 ஆம் ஆண்டில் இவ்விதப்பட்ட ஒரு சந்தர்ப்பத்திலே, இலங்கை தனது குறைவுற்ற ஏற்றுமதி வருமானத்திலிருந்து, தனியார்களினதும் அரசகருமங்களினதும் ஒப்பந்தக் கடன் பாட்டுத் தீர்ப்பனவுக்கான தொகைகளை ஒதுக்கி வைத்தபின், எஞ்சிய வருமானத்தைக் கொண்டு வாழ முயன்றிருப்பின், 1965ஆம் ஆண்டின் மிகக்குறைந்த

## அட்டவணை II (ஊ) 1

## இலங்கையின் சென்மதி நிலுவைகள் (அ)

| ஆண்டு | (1) எற்றுமதிகள் (மொத்தம்) | (2) இறக்குமதிகள் (மொத்தம்) | (3) வர்த்தக நிலுவை (i) (மொத்தம்) | (3) வர்த்தக நிலுவை (ii) (இதில் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள்) (ஆ) | (4) கட்புலனாகாதவை (தேறிய) (பண்ட நன்கொடைகளும் உட்பட) | (5) நடைமுறைக் கணக்கு நிலுவை (i) மொத்தம் 3 (1)ஐயும் (4) ஐயும் தேற்றி | (5) நடைமுறைக் கணக்கு நிலுவை (ii) இதனில் வர்த்தகக் கொடுக்கல்வாங்கல் மீதான நடைமுறைக் கணக்கு நிலுவை | (6) தேறிய நீண்டகால மூலதனம் | (7) அடிப்படை நிலுவை (5 (i)ஐயும் 6ஐயும் தேற்றி) | (8) தேறிய குறுகியகால மூலதனம் (ஈ) | (9) பிழைகளும் தவறுகளும் | (10) மொத்த வெளி நாட்டுச்சொத்துக்களில் மாற்றம் (அதிகரிப்பு) + | (11) கால முடிவில் உள்ளவெளி நாட்டு இருப்புச் சொத்துக்கள் | (12) இருப்புச் சொத்துக்கள் (ஸ்டேர்லிங் கடன் ஆழ் நிதிகளைத் தவிர்த்து) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1957 ... | 1,669 | 1,764 | − 95 | − 45 | − 100 | − 195 | − 127 | − 18 | − 213 | − 1 | — | − 214 | 1,062 | 978 |
| 1958 ... | 1,624 | 1,713 | − 89 | − 11 | − 64 | − 153 | − 119 | + 8 | − 145 | + 32 | − 16 | − 129 | 938 | 838 |
| 1959 ... | 1,773 | 1,958 | − 185 | − 49 | − 23 | − 208 | − 66 | + 32(உ) | − 176 | — | + 1 | − 175(உ) | 734 | 655 |
| 1960 ... | 1,796 | 2,006 | − 210 | − 127 | − 10 | − 220 | − 63 | + 22 | − 198 | − 24 | + 29 | − 193 | 541 | 458 |
| 1961 ... | 1,707 | 1,794 | − 87 | − 5 | − 7 | − 95 | − 48 | + 11 | − 84 | + 93 | − 19 | − 9 | 532 | 441 |
| 1962 ... | 1,763 | 1,906 | − 143 | − 47 | + 3 | − 140 | − 81 | + 39 | − 101 | + 42(ஊ) | + 31 | − 28 | 504 | 407 |
| 1963 ... | 1,708 | 1,869 | − 161 | − 27 | − 7 | − 168 | − 78 | + 80 | − 88 | + 42(ஊ) | + 4 | − 42 | 462 | 359 |
| 1964 ... | 1,767 | 1,960 | − 198 | − 39 | + 33 | − 160 | − 82 | + 69(உ) | − 92 | + 33 | − 8 | − 51(உ) | 351 | 305 |
| 1965 ... | 1,909 | 1,922 | − 13 | + 128 | + 72 | + 59 | + 136 | + 58(உ) | + 117 | + 3(ஊ) | − 6 | + 114(உ) | 440 | 408 |
| 1966(g) | 1,674 | 2.023 | − 349 | − 123 | + 44 | − 305 | − 142 | + 113 | − 192 | + 75(ஊ) | − 5 | − 122 | 318 | 282 |

(அ) அந்நிய செலாவணி வரவுகளினதும் செலவுகளினதும் பற்றிய செலாவணிக் கட்டுப்பாட்டுத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.

(ஆ) பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது. '(1) வர்த்தக வங்கிகளின் அன்னிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள். '(2) வர்த்தக வங்கிகளின் வதிவற்ற கணக்குகள் (3) மத்திய வங்கியின் அந்நிய செலாவணி இயக்கங்கள். (4) கொடுப்பனவு உடன்படிக்கைக் கொடுக்கல் வாங்கல்கள். (5) சிறப்புக் கணக்கு வசதிகளை அனுபவிக்கும் தொழில் நிலையங்களால் நடாத்தப்படும் கொடுக்கல் வாங்கல்கள். அதாவது ஸ்டேர்லிங் பெருந்தோட்டக் கூட்டு நிலையங்களினதும் வர்த்தகர்களினதும் கணக்குகள்.

(இ) தனிப்பட்டோரினதும், அரசாங்கத்தினதும் நீண்ட கால மூலதனத்தின் தேறிய இயக்கங்களை உட்படுத்தும் பற்றுத் தொகைகள் பின்வருமாறு: 1957 ரூபா 230 இலட்சம், 1958-ரூபா 230 இலட்சம், 1959-ரூபா 420 இலட்சம், 1960-ரூபா 270 இலட்சம், 1961- ரூபா 240 இலட்சம், 1962-ரூபா 460 இலட்சம், 1963-ரூபா 820 இலட்சம், 1964- ரூபா 790 இலட்சம், 1965- ரூபா 720 இலட்சம், 1966- ரூபா 1580 இலட்சம்.

(ஈ) இருபுடை வர்த்தகக் கொடுப்பனவு ஒப்பந்தங்களின் கீழ் உள்ள பொறுப்புக்களின் மாற்றங்களையும், அமெரிக்க பொதுசனச் சட்டம் 480 இன் பயனுக எழுந்த பதில் நிதிகள், பதிவற்றவருக்கான வர்த்தக வங்கிகளின் பொறுப்புக்கள், சர்வதேச நாணய நிதியிலிருந்து எடுக்கப்பட்ட நிகரதொகைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. 1964, 1965, 1966ஆம் ஆண்டுகளுக்கான எண்தொகைகள் அரிசி இறக்குமதியின் பேரில் பர்மாவிற்குக் கொடுக்கவேண்டிய தொகைகளையும் உள்ளடக்கும்.

(உ) 1959ஆம் ஆண்டு 240 இலட்சம் ரூபாய்களும் 1964ஆம் ஆண்டு 600 இலட்சம் ரூபாய்களும் 1965ஆம் ஆண்டு 250 இலட்சம் ரூபாய்களுமான, இடைக்கப்பெற்ற ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிகளிலிருந்து கொடுக்கப்பட்ட திருப்பிக் கொடுப்பனவுகளைப் பிரதானமாகக் கொண்ட, ஸ்டேர்லிங் கடன் திருப்பிக் கொடுப்பனவுகளைத் தவிர்த்து.

(ஊ) சர்வதேச நாணய நிதியிலிருந்து எடுக்கப்பட்டவையான 1961ஆம் 1962ஆம் ஆண்டுகளில் முறையே 538 இலட்சம் ரூபாய்களையும் 1965ஆம் ஆண்டில் 1094 இலட்சம் ரூபாய்களையும் 1966ஆம் ஆண்டில் ரூபா 1440 இலட்சம் ரூபாய்களையும் உள்ளடக்கும். இதில் முன்னைய எடுப்பனவுகளின் பேரிலான, திருப்பிக் கொடுப்பனவுகளாகிய 1965ஆம் ஆண்டின் ரூபா 357 இலட்சத்தையும் 1966ன் ரூபா 536 இலட்சத்தையும், இலங்கையின் அனுமதிப்பங்கு 1965ல் $ 450 இலட்சத்திலிருந்து (2142 இலட்சம் ரூபாய்கள்), $ 620 இலட்சத்திற்கும் (2951 இலட்சம் ரூபாய்கள்) 1966ஆம் ஆண்டில் $780 இலட்சத்திற்கும் (ரூபா 3713 இலட்சம்) அதிகரித்ததன் பயனாக இலங்கையின் தங்க உதவு தொகையாகக் கொடுக்கப்பட்ட 1965 ஆம் ஆண்டின் ரூபா 202 இலட்சம், 1966ஆம் ஆண்டின் ரூபா 190 இலட்சம் ஆகிய தொகைகளும் கழித்து.

(எ) தற்காலிகமானவை.

மட்டங்களிலும் பார்க்கக் குறைவான மட்டத்திற்கு இறக்குமதிகளைத் தீவிரமாகக் குறைக்க வேண்டிய நிலை எழுந்திருக்கும். நுகர்வுப் பொருட்களின் இறக்குமதித் தொகை, 1966 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியளவில், ஏற்கனவே மிகக் குறைந்த அளவுடைய மட்டத்திற்குத் துண்டிக்கப்பட்டுள்ளமையால், 1966ஆம் ஆண்டின் இறக்குமதிகளை மேலும் குறைத்தல், மூலப் பொருட்களினதும், மூலதனப் பொருட்களினதும் இறக்குமதிகளை பெரிதும் துண்டிக்கச் செய்திருக்கும். இதன் விளைவாக உள்நாட்டு மூலதன ஆக்கம் குறைவுற்றும், கைத்தொழில் ஆலைகளின் உற்பத்திகள் அவற்றின் உற்பத்தி வலிமையிலும் பார்க்கக் குறைக்கப்பட்டும், பொருளாதார வளர்ச்சி விகிதம் குறைவுற்றும், அமைய நேரிட்டிருக்கும். உள்நாட்டு விலைகளைத் திடப்படுத்தும் முயற்சியும் மிகக் கடினமாக இருந்திருக்கும். ஆயினும் இவ்விதப்பட்ட சந்தர்ப்பத்திலே, நல்லுறவுக் கூட்டு உதவியைப் பிரதானமாகக் கொண்ட, வெளிநாட்டு உதவிகள் கணிசமானளவு அதிகரித்துக் கிடைக்கப்பெற்றதன் விளைவாக, ஏற்றுமதி வருமானத்தின் குறைவுற்ற நிலைமட்டத்திற்கு, இறக்குமதிகளைக் குறைக்க வேண்டிய அவசியம் குறைவாக இருந்தது. மொத்த நீண்டகால அந்நிய மூலதன உட்பாய்வு, 1965ஆம் ஆண்டில் ரூபா 1420 இலட்சமாக இருந்ததற்கெதிராக 1966 ஆம் ஆண்டில் அது ரூபா 2240 இலட்சமாக விளங்கிற்று. 1966ஆம் ஆண்டு மூலதனக் கணக்கிற் தேறிய நிகரமிகை ரூபா 1130 இலட்சமாகும். நடை முறைக் கணக்கிலேற்பட்ட ரூபா 3050 இலட்சம் கொண்ட (உதவி மூலம் பெறப்பட்ட சகல வணிகப் பொருட்களின் இறக்குமதிகளும், நன்கொடைகளும் உட்பட) குறைக்கு நிதியீட்டும்வகையில், மூலதனக் கணக்கு நிலுவையிற்தேறிய ரூபா 1130 இலட்சம் உபயோகிக்கப்பட்டபின், 1966 ஆம் ஆண்டில் மேலும் நிதியீட்ட வேண்டிய ரூபா 1920 இலட்சம் கொண்ட ''அடிப்படைக் குறை'' * காணப்பட்டது. ஒப்பியல்பாக 1965 இல் ரூபா 1170 இலட்சம் கொண்ட மிகை காணப்பட்டது.

1966 ஆம் ஆண்டின் அடிப்படைக்குறைக்கு நிதியீட்டும் முறையில் இலங்கை தனது வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களை ரூபா 1220 இலட்சத்தாற் குறைத்தும், சர்வதேச நாணய நிதியிலிருந்து ரூபா 714 இலட்சம் (தேறிய) ** கடன் எடுத்தும் நிதியீட்டம் செய்தது. இதனுல், ஏற்கெனவே குறைந்துள்ள இலங்கையின் அந்நிய செலாவணி ஒதுக்கு நிதிகளை (ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிகளைத் தவிர்த்து), மேலும் உபயோகித்து இப் பணக்குறையை நிதியீட்டம் செய்யவேண்டியமை அவசியமாகிற்று. இதன் பலனுக, 1965 ஆம் ஆண்டின் முடிவில் ரூபா 4080 இலட்சமாகவிருந்த இவ்வொதுக்குநிதிகள், 1966 ஆம் ஆண்டு முடிவில் ரூபா 2820 இலட்சமாக, அல்லது இரண்டு மாதத்திற்கும் குறைந்த சராசரி இறக்குமதிக் கொடுப்பனவுகளுக்கு மட்டும் நிதியீட்டுவதற்குப் போதுமான தொகையாக வீழ்ச்சியுற்றன. 1966 ஆம் ஆண்டில்மேலும் ரூபா 40 இலட்சம் கொண்ட தொகை ஸ்டேர்லிங் கடன்ஆழ்நிதிகளுக்கு உதவப்பட்டது.

**வெளிநாட்டுப் பொருள் வளங்களும் அவற்றின் பயன்பாடுகளும்**

1966 ஆம் ஆண்டிற் சம்பாதிக்கப்பட்ட அந்நிய செலாவணிகளினுல் இலங்கைக்குக் கிடைக்கக்கூடிய வெளிநாட்டுப் பொருள் வளங்கள், 1965ற்குரிய ரூபா 21080 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 18800 இலட்சமாக இருந்தன. வணிகப்பொருள் ஏற்றுமதி வருவாய்களை முந்தைய வருடத்திற்குரிய ரூபா 19090 இலட்சத்துடன் ஒப்பிடுகையில், இவ் வருடம் ரூபா 16740 இலட்சமாக இருந்தன. சேவைகளிலிருந்து பெற்ற வருமானம், 1965ற்குரிய ரூபா 1990 இலட்சத்துடன் ஒப்பிடுகையில், இவ்வருடம் ரூபா 2060 இலட்சமாக விளங்கிற்று. 1966 ஆம் ஆண்டில் இலங்கை உபயோகித்த அந்நிய பொருள்

---

* நடைமுறைக் கணக்கிலும், மூலதனக் கணக்கிலும் உள்ள நிலுவைகளை ஒன்றுசேர்த்து நேராக்கப்பட்டபின் சென்மதி நிலுவையிற் காணப்படும் தேறிய நிலுவை நிலை இதுவாகும்.

** இலங்கையின் அனுமதிப் பங்கு ரூபா 3713 இலட்சத்திற்கு அதிகரிக்கப்பட்டதன் காரணமாக எழுந்த தங்கக் கட்டண உதவுதொகையைக் கொடுப்பதற்கு விசேட ஒழுங்குகளின் கீழ் சர்வதேச நாணய நிதியிலிருந்து கடனுகப் பெறப்பட்ட ரூபா 190 இலட்சம் கொண்ட மேலதிகத் தொகை இதிற் சேர்க்கப்படவில்லை.

வளங்களின் பெறுமானம், ரூபா 24070 இலட்சமாக அமைந்து, நடைமுறையிற் சம்பாதிக்கபபட்ட வருமானத்திலும் பார்க்க ரூபா 5270 இலட்சம் (அல்லது 28 சதவீதம்) மேலதிகமானதாய் விளங்கிற்று. இத்தகைய செலவீடு (அ) 1965ஆம் ஆண்டு முடிவில் மிதமான மட்டத்திற்கு உயர்த்தப்பட்ட இலங்கையின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களைக் குறைத்தும், (ஆ) நீண்ட கால, நடுத்தர கால அந்நிய கடன்கள், நன்கொடைகளைப் பெற்றும், (இ) பிற்போடப்பட்ட கொடுப்பனவுகள்வடிவத்திற் குறுகிய காலப் பொறுப்புகளை அதிகரித்தும், (ஈ) அந்நியமூலங்களிலிருந்து, பிரதானமாகச் சர்வதேச நாணய நிதியிலிருந்து குறுகியகாலக் கடன்களை எடுத்துமே செய்யமுடிந்தது. எனவே, 1965 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1966 இல் உயர்ந்த அளவுடைய வெளிநாட்டுப் பொருள்வளங்களை இலங்கை உபயோகிக்க முடிந்தமைக்குப் பிரதானமாக, ஒரு புறத்தில் 1965 ஆம் ஆண்டின்போது வளர்க்கப்பட்ட வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் உதவியையும், மறுபுறத்தில் உதவி வழங்கும் நாடுகள், ஏனைய வர்த்தகப் பங்காளர்கள், சர்வதேச நாணய நிதி ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட உதவிகளுமே வகைதந்தன.

அட்டவணை II (ஊ) 2இல் காட்டியுள்ளபடி, 1966 ஆம் ஆண்டில் வணிகப் பொருள்களின் எற்றுமதிகளிலிருந்தும், சேவைகளின் விற்பனைகளிலிருந்தும் இலங்கையினுற் சம்பாதிக்கப்பட்ட ரூபா 18800 இலட்சம் கொண்ட அந்நிய செலாவணி வருமானத்திற்குப் பக்கபலமாக பலவித கடனெழுங்குகளும், வெளிநாட்டுப் பொருளுதவிகளும் காணப்பட்டன. இப்படியாகப் பெறப்பட்ட மொத்த வளங்களில் ரூபா 2240 கொண்ட தொகை, கடன்களாகவும் நன்கொடைகளாகவும் பெறப்பட்ட உதவியாகும். இத்தொகையிற் கடன்கள் ரூபா 1730 இலட்சமாகவும், நன்கொடைகள் ரூபா 510 இலட்சமாகவும் இருந்தன. நன்கொடைகள் உட்பட, திட்ட உதவிகள் ரூபா 750 இலட்சமாகவும், நல்லுறவுக் கூட்டுதவிகள் ரூபா 1320 இலட்சமாகவும் விளங்கின. 1966 ஆம் ஆண்டின்போது இலங்கைக்குக் கிடைத்த இவ்வளங்களுக்குத் துணையாகப் பல்வேருன அந்நிய நிலையங்களுக்கு இலங்கையின் குறுகியகாலப் பொறுப்புக்களை அதிகரிக்கவும், இலங்கையின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களைக் குறைக்கவும் நேரிட்டது. சர்வதேச நாணய நிதியிலிருந்து எடுக்கப்பட்ட மொத்த அந்நிய செலாவணி ரூபா 1440 இலட்சமாக இருக்கையில்,* இரு பக்கக் கொடுப்பனவு ஒப்பந்தங்களின் கீழ் இலங்கை தன் பொறுப்புக்களை ஏறக்குறைய ரூபா 300 இலட்சத்தால் அதிகரித்தது. இதற்குப் புறம்பாக 1966 ஆம் ஆண்டின் முடிவில் இலங்கை பர்மாவுக்குக் கொடுக்கவேண்டிய தொகை ரூபா 306 இலட்சமாக இருந்தது. 1965 ஆம் ஆண்டில் சாதகமான சென்மதி நிலுவை நிலை ஏற்பட்டமையால் இலங்கை தனது வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களை (ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிகளைத் தவிர்த்து) ரூபா 4080 இலட்சத்திற்கு உயர்த்த முடிந்தது. இது, 1966 ஆம் ஆண்டின் போது இலங்கையின் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட சமமின்மையின் ஒரு பகுதிக்கு நிதியீட்டுவதற்காக ரூபா 1220 இலட்சத்தாற் குறைக்கப்பட்டது. எனவே, தனது சர்வதேசக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு இலங்கைக்குக் கிடைக்கக்கூடியதாய் இருந்த வளங்களின் மொத்தத் தொகையில் 79 சதவீதமானவை நடைமுறையிற் சம்பாதிக்கப்பட்ட அந்நிய செலாவணிகளிலிருந்தும், 9 சதவீதமானவை பலவித மூலதன உட்பாய்வுகளிலிருந்தும் (இவற்றில் 76 சதவீதம் கடன்களாகவும் 23 சதவீதம் நன்கொடைகளாகவும் உள்ளன), 7 சதவீதமானவை குறுகியகாலப் பொறுப்புக்களினூடாகத் திரட்டப்பட்ட பொருள்வளங்களிலிருந்தும், 5 சதவீதமானவை வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களிலிருந்தும் பெறப்பட்டனவாகும்.

---

* சர்வதேச நாணயநிதியில் இலங்கையின் அனுமதிப்பங்கு ரூபா 3713 இலட்சத்திற்கு அதிகரிக்கப்பட்டதன் காரணமாக எழுந்த தங்கக் கட்டண உதவுதொகையைக் கொடுப்பதற்குச் சர்வதேச நாணய நிதியிலிருந்து பெற்ற விசேடக் கடனை ரூபா 190 இலட்சமும் இதிற் சேர்க்கப்பட்டுள்ளது.

## அட்டவணை II (ஊ) 2

## 1965ஆம் 1966ஆம் ஆண்டுகளுக்கான வெளிநாட்டு வளங்களும் அவற்றின் பயன்களும்

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | சதவீதப் பங்குகள் | |
|---|---|---|---|---|
| | 1965 | 1966 | 1965 | 1966 |
| **(அ) வளங்கள்** | | | | |
| **1. வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளின் க. எ. பெ.** ... | 1,909 | 1,674 | 81 | 70 |
| **2. கட்புலனுகா நடைமுறை விடயங்கள்** ... | 199 | 206 | 8 | 9 |
| **3. மூலதன உட்பாய்வு** ... | 142 | 226 | 6 | 9 |
| அதில் — | | | | |
| (அ) கடன்கள் (1) ... ... | 77 | 173 | 55 | 76 |
| (ஆ) நன்கொடைகள் (1) ... ... | 65 | 51 | 45 | 28 |
| (இ) தனியார் முதல் ... ... | — | 2 | — | 1 |
| **4. குறுகியகாலப் பொறுப்புக்கள்...** ... | 109 | 175 | 5 | 7 |
| அதில்— | | | | |
| (அ) சர்வதேச நாணய நிதியிலிருந்து மொத்த எடுப்பனவுகள் (2) ... | 109 | 144 | 100 | 82 |
| (ஆ) இருபுடைக் கொடுப்பனவு ஒப்பந்த நிலுவையின் அதிகரிப்பு ... | — | 31 | — | 18 |
| **5. வெளிநாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சி) (ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதி தவிர்த்து)** ... | — | 126 | — | 5 |
| **மொத்தம்** ... | 2,359 | 2,407 | 100 | 100 |
| **(ஆ) பயன்பாடு** | | | | |
| **6. வணிகப்பொருட்கள் ... இறக்குமதிகள் கொ. கா. க.** ... | 1,922 | 2,023 | 81 | 84 |
| அவற்றில் உதவி ... ... | 142 | 224 | 7 | 11 |
| **7. கட்புலனுகா நடைமுறை விடயங்கள்** ... | 199 | 225 | 8 | 9 |
| அவற்றில் | | | | |
| (அ) முதலீட்டு வருமானம் ... ... | 4 | 30 | 2 | 13 |
| (ஆ) குடியகல்வோர் மாற்றல்கள் ... | 31 | 32 | 16 | 14 |
| (இ) வட்டிக் கொடுப்பனவுகள் ... | 22 | 21 | 11 | 9 |
| **8. மூலதன கடன் குறைப்பு அல்லது மீட்பு** ... | 75 | 114 | 3 | 5 |
| (அ) தனியார் ... ... ... | 3 | 11 | 4 | 10 |
| (ஆ) அரசகருமம் ... ... | 16 | 30 | 21 | 26 |
| (இ) சர்வதேச நாணய நிதியில் மீளக் கொள்வனவுகளும் தங்க உதவு தொகைகளும் ... ... | 56 | 73 | 75 | 64 |
| **9. குறுகிய காலப் பொறுப்புகள் (3)** ... | 69 | 53 | 3 | 2 |
| **10. வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பு (ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிகள்தவிர்த்து)** | 103 | — | 5 | — |
| **11.** நேராக்கல் விடயம் ... ... | —9 | —8 | — | — |
| **மொத்தம்** ... | 2,359 | 2,407 | 100 | 100 |

1. திட்ட உதவி, பண்டஉதவிஆகியவற்றிலிருந்து பெற்ற உதவிகளை உள்ளடக்கும்.

2. இலங்கையின் அனுமதிப்பங்கு 1965ஆம் ஆண்டில் $ 450 இலட்சத்திலிருந்து $ 620 இலட்சத்திற்கும் 1966இல் $ 780 இலட்சத்திற்கும் அதிகரித்ததின் பேரில் ஏற்பட்ட தங்கக் கட்டண உதவு தொகையின் கொடுப்பனவிற்கென சர்வதேச நாணய நிதியிலிருந்து பெற்ற 1965ஆம் ஆண்டிற்கான ரூ 200 இலட்சமும் 1966ஆம் ஆண்டிற்கான ரூ 190 இலட்சமும் கொண்ட விசேட எடுப்பனவுகளை உள்ளடக்கும்.

3. குறுகிய காலப்பொறுப்புக்கள் என்பதில் 1966ஆம் ஆண்டில் இருப்புடைக் கொடுப்பனவு ஒப்பந்த நிலுவைகளின் வீழ்ச்சியையும், விசேட கணக்கு வசதிகளை அனுபவிக்கும் தொழில் நிலைய நிலுவைகளின் மாற்றத்தையும், அரசாங்க உணவு இறக்குமதிகள் மீதான காலந்தாழ்த்திய கொடுப்பனவையும் உள்ளடக்கும்.

1966 ஆம் ஆண்டில் இலங்கைக்குக் கிடைக்கக் கூடிய மொத்த வெளிநாட்டு வளங்கள் ரூபா 24070 இலட்சமாக இருந்தன. இத்தொகையில் ரூபா 20230 இலட்சம் (அல்லது 84.0 சத வீதமானவை) வணிகப் பொருள் இறக்குமதிகளின்மீது செலவுசெய்யப்படும், ரூபா 2250 இலட்சம் (அல்லது 9.0 சதவீதமானவை) சேவைகளின் கொடுப்பனவுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டும் இருக்கையில், அந்நிய கடன்களின் கடன் குறைப்பிற்கும், அந்நிய முதலீட்டங்களின் மீட்சிக்குமான தொகை ரூபா 1140 இலட்சத்தை (அல்லது 5.0 சதவீதத்தை)க் கைப்பற்றின. சேவைகளின் பேரில் எழுந்த கொடுப்பனவுகளுக்கு உபயோகிக்கப்பட்ட வெளிநாட்டுப் பொருள்வளங்களில், ரூபா 300 இலட்சம் (13 சதவீதம்) மூலதன வருமானங்கள் அனுப்பப்படுவதற்கும், ரூபா 320 இலட்சம் (14 சதவீதம்) குடியகல்வோர் மாற்றங்களுக்கும், ரூபா 210 இலட்சம் (9 சதவீதம்) வட்டிக் கொடுப்பனவுகளுக்கும் உபயோகிக்கப்பட்டன. இதே போல, மூலதன மீழ்ச்சி, மூலதனக் குறைப்பு ஆகியவற்றின் தொகையில் தனியார் மூலதன மீழ்ச்சிக்கான ரூபா 110 இலட்சம் (10 சதவீதம்) கொண்ட தொகையில் நில எரி எண்ணைக் கூட்டுநிலையங்களுக்கு நட்ட ஈடாகக் கொடுக்கப்பட்ட ரூபா 90 இலட்சமே பிரதானமாக அமைந்துள்ளது. அந்நிய அரசாங்கக் கடன்கள் திருப்பிக் கொடுக்கப்பட்ட வகையில் ரூபா 300 இலட்சம் (26 சத வீதம்) கொண்ட தொகையும், சர்வதேச நாணய நிதியிலிருந்து பெற்ற ரூபா 540 இலட்சம் கொண்ட மறுகொள்வனவுகள் 64 சதவீதத்தையும் பெற்றன.

### 1966 ஆம் ஆண்டின் விபரமான தன்மைகள்

#### (அ) வணிகப்பொருட் கணக்கு

வணிகப்பொருட் கணக்கு நிலுவையில் (வர்த்தகக் கொடுக்கல் வாங்கல், உதவி நிதியீட்ட இறக்குமதிகள் ஆகிய இரண்டும் உட்பட) , 1965 ஆம் ஆண்டு ஏற்பட்ட ரூபா 130 இலட்சம் கொண்ட குறையுடன் ஒப்பிடுகையில், 1966இல் ரூபா 3490 இலட்சம் கொண்ட குறை காணப்பட்டது. 1960 ஆம் ஆண்டின்பின் ஏற்பட்ட குறைகளுள் இதுவே மிகக் கூடியளவுடைய குறையாகும். உதவி நிதியீட்ட இறக்குமதிகளைத் தவிர்ப்பினும்கூட வணிகப் பொருட் கணக்கில் 1965 இல் ஏற்பட்ட ரூபா 1280 இலட்சம் கொண்ட மிகைக்கு எதிராக, 1966 இல் ரூபா 1230 இலட்சம் கொண்ட குறை காணப்படுகிறது. இதுவும் 1960 ஆம் ஆண்டின்பின் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களால் வணிகப்பொருட் கணக்கிலேற்பட்ட குறைகளில் ஆகப் பெரிதாக அமைகின்றது. 1960 இல் இக்குறை ரூபா 1270 இலட்சமாக இருந்தது.

1966இல் வணிகப் பொருள் ஏற்றுமதிகள் ரூபா 16740 இலட்சமாக அமைந்து, 1965இலும் பார்க்க 2350 இலட்சம் ரூபாய்களாற் குறைவுற்றிருந்தன. வணிகப் பொருள் இறக்குமதிகள் (உதவி நிதியீட்ட இறக்குமதிகளும் உட்பட), 20230 இலட்சம் ரூபாய்களாக 1965ற்குரிய தொகையிலும் பார்க்க 1010 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்து விளங்கின. எனவே வர்த்தகக் குறை, 1965 ஆம் ஆண்டிற்குரிய 130 இலட்சம் ரூபாய்களுக்கெதிராக, 1966இல் 3490 இலட்சம் ரூபாய்களாக இருந்தது. இரப்பரைத் தவிர்ந்த ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகளின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சியும், ஏற்றுமதிப் பொருட்களின் சராசரி விலைகளில் ஏற்பட்ட பொதுவான வீழ்ச்சியுமே, ஏற்றுமதி வருவாய்கள் கணிசமாக வீழ்ச்சியடைவதற்குப் பிரதான காரணங்களாக அமைந்தன. சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது, ஏற்றுமதி அளவுகளில் இவ்வருடத்திலேற்பட்ட வீழ்ச்சிக்கு, தேயிலையிலும் தெங்குப் பொருட்களிலும் உற்பத்திகள் வீழ்ச்சி அடைந்தமையே முக்கிய காரணமாக இருந்தது. 1966 ஆம் ஆண்டின் தேயிலை ஏற்றுமதிகளிற் கூரிய வீழ்ச்சி ஏற்பட்டமை, 1965 இல் கையிருப்புகள் குறைக்கப்பட்டமையாலேயே ஏற்றுமதிகளை அதிகரிக்க முடிந்தது என்பதைப் பிரதிபலிக்கின்றது. மேலும் 1966இன் கடைசிக் காலாண்டில் ஏற்பட்ட வேலைநிறுத்தம், அவ்வாண்டின் கடைசி மாதங்களின் ஏற்றுமதி அளவுகளைத் தாமதப்படுத்தியிருக்கலாம். தேயிலை, தெங்குப் பொருட்கள் ஆகியனவற்றின் ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட மாற்றத்திற்கு எதிராக, இரப்பரின் ஏற்றுமதி

அளவுகள் சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது, கணிசமான அளவில் உயர்ச்சியுற்றிருந் தன. இவ்வுயர்ச்சி சில புனர்நடுகை செய்யப்பட்ட பிரதேசங்கள் உற்பத்திப் பருவத்தை எய்தியமையால் ஏற்பட்ட உற்பத்தி உயர்வைப் பிரதிபலிக்கின்றது.

**1966** இன் ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட திருப்தியற்ற நிலை, பிரதான ஏற்றுமதிப் பொருட்களிலும், ஏனைய ஏற்றுமதிப் பொருட்களிலும் ஏற்பட்ட ஒரே விதிவிலக்கற்ற விலை வீழ்ச்சியால் மேலும் சீர்கேடான நிலையை அடைந்தது. தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை, மத்திய வங்கியின் விலைக் குறிகாட்டிகளின்படி (**1958-100**), **1965**ற்கான **89** புள்ளிக ளிலிருந்து **1966** இல் **85** புள்ளிகளுக்கு வீழ்ச்சியுற்று,கடந்த **14** வருடங்களிற் காணப்படாத மிகக்குறைந்த மட்டத்தைப் பதிவுசெய்தது. இரப்பர் விலைகளின் குறிகாட்டி, **1960**ஆம் ஆண்டில் ஆரம்பித்த வீழ்ச்சிப் போக்கைத் தொடர்ந்து, **1965**ற்கான **91** புள்ளிகளிலிருந்து **1966** இல் **90** புள்ளிகளுக்கு வீழ்ச்சியுற்றது. ஐக்கிய அமெரிக்க கையிருப்புச் சேர்க்கைகளி லிருந்து சந்தைக்கு விடப்பட்ட இரப்பரின் அளவு அதிகரித்தமையாலும், பிரதான இரப் பர் உற்பத்தி நாடுகளிலிருந்து கூடிய அளவில் மறுபடியும் ஏற்றுமதி செய்யப்பட்டதாலும் **1966** இல் இரப்பரின் மொத்த நிரம்பல் அதிகரித்ததன் விளைவாக, விலைகள் தாழ்ந்தன. **1965**இல், சிறிய ஏற்றுமதிப் பொருட்களின் சராசரி விலை, அதற்கு முந்திய ஆண்டுக்குரிய விலையிலும் பார்க்க முன்னேற்றமடைந்திருந்த போதும், **1966**ஆம் ஆண்டில் மீண்டும் ஏற்பட்ட வீழ்ச்சியினால், **1965**ஆம் ஆண்டிற் பெறப்பட்டிருந்த முன்னேற்றம்யாவும் இழக்கப்பட்டது.

வணிகப் பொருள் இறக்குமதிகளின் மொத்தப் பெறுமானம், **1965**ஆம் ஆண்டிற் கான **19220** இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், **1966**இல் **20230** இலட்சம் ரூபாய் களாக விளங்கியது. இத்தொகையில், **1966**இல் உதவி நிதியீட்டம்பெற்ற இறக்குமதி கள் ரூபா **2240** இலட்சமாக அமைந்து, **1965**இல் இவ்விதம் பெறப்பட்ட இறக்குமதிகளி லும்பார்க்க **830** இலட்சம் ரூபாய்களால் உயர்ந்து விளங்கின. உதவி நிதியீட்டம்பெற்ற இறக்குமதிகள் **1966**இல் அதிகரித்தமை, **1965** ஆம் ஆண்டில் ஒழுங்காக்கப்பட்ட உதவி முறைகளைத் தொடர்ந்து, **1966** இல் அதிகரித்த அளவுடைய உதவிகள் கிடைக்கப்பெற்ற தைப் பிரதிபலிக்கின்றது. **1966** இல் இலங்கையின் சொந்த வளங்களிலிருந்து நிதியீட் டப்பட்ட இறக்குமதிகள், சென்ற ஆண்டிற்குரிய தொகையிலும் பார்க்க **180** இலட்சம் ரூபாய்களால் அதிகரித்து, **17990** இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தது. இது **1966** ஆம் ஆண்டின் முற்பகுதியில் வரையப்பட்ட அந்நிய செலாவணி வரவு செலவுத்திட்டத்தில் **1966**ற்கான ஏற்றுமதி வருவாய்கள் **1965**ற் கிடைத்த அளவிலும்பார்க்கக் குறைவாக இருக்குமென எதிர்பார்த்துக் கணிக்கப்பட்டமையை ஓரளவிற்குப் பிரதிபலிக்கின்றது. இவ் விடயத்தில், ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த உண்மையான வருவாய்கள் **1966**ற்கான அந்நிய செலாவணி வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட அளவிலும் பார்க்க மிகக் குறைந்த மட்டத்துக்கு வீழ்ச்சியடைந்தன. எனவே, அதிகரித்த உதவிகளின் உள் வரவினாலும், குறுகியகாலப் பொறுப்புக்களை அதிகரித்ததனாலும், **1965**இல் மிதமான மட்டத்துக்கு உயர்த்தப்பட்டிருந்த வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களைக் குறைப்பதனாலு மே, **1966** இல் இலங்கை தனது வருமானத்திலும் மேலாகச் செலவு செய்யமுடிந்தது.

**1966** ஆம் ஆண்டின் வணிகப் பொருள் இறக்குமதிகளுள், அரசாங்க இறக்குமதிகள் **1965** ஆம் ஆண்டில் ரூபா **7570** இலட்சம் (அல்லது **43** சதவீதம்) கொண்ட பங்காக விளங் கியதற்கெதிராக, **1966** இல் ரூபா **6790** இலட்சம் (அல்லது **38** சதவீதம்) கொண்ட பங்கு டையதாக அமைந்தன. தனியார்துறை இறக்குமதிகளும், அரசாங்க கூட்டுத்தாபனங் களின் இறக்குமதிகளும், **1965** ஆம் ஆண்டிற்கான ரூபா **11410** இலட்சத்திற்கெதிராக, **1966** இல் ரூபா **13200** இலட்சமாக இருந்தன. அரிசி இறக்குமதிகளுக்கான கொடுப் பனவுகள் **1965**ம் ஆம் ஆண்டில் ரூபா **2908** இலட்சமாகவும், **1966** இல் ரூபா **2679** இலட்ச மாகவும் இருந்தன. கோதுமை மாவின் இறக்குமதிப் பெறுமானம் **1965** இல் ரூபா **828** இலட்சமாகவிருந்து, **1966** ஆம் ஆண்டு ரூபா **1375** இலட்சத்திற்கு அதிகரித்தமை, ஓரளவில்

1966 ஆம் ஆண்டின் அந்நிய உதவியினால் நிதியீட்டப்பட்ட கோதுமை மா இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. சீனி இறக்குமதிகளின் பெறுமானம் 1965 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 751 இலட்சத்திலிருந்து, 1966 ஆம் ஆண்டு ரூபா 700 இட்சத்திற்கு வீழ்ச்சியுற்றது. இது 1966 ஆம் ஆண்டின் சீனி இறக்குமதி அளவில் எவ்வித வீழ்ச்சியும் காணப்படாத சந்தர்ப்பத்தில், முக்கியமாக, உலகச் சீனிச்சந்தையில் நிலவிய தாழ்ந்த விலைகளையே பிரதிபலிக்கின்றது.

முன்னர் கூறப்பட்டதுபோல, 1966 இல் கடன் மூலம் நிதியீட்டப்பட்ட இறக்குமதிகளின் பெறுமானம் ரூபா 1730 இலட்சமாக இருந்தது. முந்தைய வருடத்தில் அவை ரூபா 770 இலட்சமாக இருந்தன. 1966ற்கான தொகையில், திட்ட உதவிகள் (நன்கொடைகள் தவிர) ரூபா 550 இலட்சமாகவும், பொருட்களான உதவிகள் ரூபா 1180 இலட்சமாகவும் (நன்கொடைகள் தவிர) இருந்தன. 1966 ஆம் ஆண்டிற் பெறப்பட்ட நன்கொடை உதவிகளின் தொகை ரூபா 510 இலட்சமாகும். இவை முக்கியமாக இயந்திரங்களாகவும் கோதுமை மாவாகவும் பெறப்பட்டன. இயந்திர இறக்குமதிகள், கட்டுநாயக்க விமானத்தளத் திட்டத்தின் நிதியீட்டத்திற்குக் கனடாவிலிருந்து பெறப்பட்ட ரூபா 167 இலட்சம் பெறுமதியான நன்கொடைகளையும், ஆடை இயந்திர வடிவில் சீனுவிலிருந்து பெறப்பட்ட ரூபா 25 இலட்சத்தையும் கொண்டுள்ளன. கோதுமை மா வடிவத்திலான நன்கொடைகள், பிரதானமாக ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளிலிருந்து பெறப்பட்டனவாகும். திட்ட உதவி இறக்குமதிகளாவன உலக வங்கியிலிருந்து ரூபா 68 இலட்சம், ரூசியாவிலிருந்து ரூபா 92 இலட்சம், சீனுவிலிருந்து ரூபா 90 இலட்சம், ஜேர்மன் சமஷ்டிக் குடியரசிலிருந்து (மேற்கு ஜேர்மனி) ரூபா 167 இலட்சம், ஐக்கிய இராச்சியத்திலிருந்து ரூபா 45 இலட்சம், கனடாவிலிருந்து ரூபா 55 இலட்சம், யூகோசிலவியாவிலிருந்து ரூபா 17 இலட்சம், பிரான்ஸ், போலந்து உட்பட்ட ஏனைய உதவியளித்த நாடுகளிலிருந்து பெற்ற பலவித சிறுதொகைகள், ஆகிய கொடுப்பனவுகளைக் கொண்டவையாகும். இவ்விறக்குமதிகள், 1966 ஆம் ஆண்டின் போது நடைமுறை அபிவிருத்தித் திட்டங்களின் நிதியீட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன.

**(ஆ) நடைமுறைக் கட்புலனுகாக் கணக்கு**

இலங்கையின் நடைமுறைக் கட்புலனுகாக் கணக்கிற் தேறிய நிலுவைநிலை (பொருட்களாகவுள்ள நன்கொடைகள் உட்பட) 1965ம் ஆண்டின் 716 இலட்சம் கொண்ட மிகையுடன் ஒப்புநோக்கும் பொழுது, 1966 ஆம் ஆண்டில் 440 இலட்சம் ரூபா கொண்ட மிகையைக் காட்டியது. சென்ற ஆண்டுடன் ஒப்பு நோக்கும் பொழுது, கட்புலனுகாக் கணக்கிலுள்ள மிகை குறைவுற்றதற்கு, அந்நிய முதலீட்டு வருமானங்கள் அனுப்பப்படுவதிற் தற்காலிகமாக விதிக்கப்பட்டிருந்த தடை குறிப்பிடத்தக்க அளவினுற் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, முதலீட்டு வருமானத்தின் பேரில் உள்ள குறை பெரிய அளவுடையதாய் அதிகரித்தமையே பிரதான காரணமாகும். 1965 ஆம் ஆண்டில் 154 இலட்ச ரூபாவாக விளங்கிய முதலீட்ட வருமானக் குறை, 1966 ஆம் ஆண்டில் 421 இலட்ச ரூபாய்களுக்கு உயர்வுற்றது. 1966 இன் முதல் அரையாண்டில் தடுக்கப்பட்ட முதலீட்டு வருமானத்திலிருந்து விடுவிக்கப்பட்ட தொகை 135 இலட்சம் ரூபாய்களாக விளங்கிற்று. அதன் பின் மாதத்திற்கு 35 இலட்சம் ரூபாய்களாக விடுவிக்க அனுமதியளிக்கப்பட்டதன் விளைவாக இரண்டாம் அரையாண்டில் விடுவிக்கப்பட்ட தொகை 210 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தது. இத்தொகைகள், ஏற்றுமதி வருமானங்கள் கூர்மையாக வீழ்ச்சியுற்றுக் கொண்டிருக்கும் பொழுதும், சென்மதி நிலுவையின்மீது கடுமையான அமுக்கங்கள் இருந்தபோதும் விடுவிக்கப்பட்டன. ஆகவே, இது, தற்காலிகத் தடையின் நிமித்தம் சேகரிக்கப்பட்ட சகல பொறுப்புக்களையும் இயலுமானளவு நீக்குவதற்கு இலங்கை உறுதியான முயற்சி எடுத்துள்ளதைக் காட்டுகிறது. தடுக்கப்பட்ட நிதிகளிலிருந்து இவ்வாறு விடுவிக்கப்பட்ட தொகையில் ஆக 292 இலட்சம் ரூபாய்கள் மட்டுமே 1966 ஆம் ஆண்டில் அனுப்பப்பட்டது. மேலும் சென்ற ஆண்டுடன் ஒப்புநோக்கும்பொழுது, 1966ம் ஆண்டில்,

பிரயாணத்திற்கும் தனியார் மாற்றல்களுக்குமான இலங்கையின் செலவில் சிறிய அதிகரிப்புகள் பதிவுசெய்யப்பட்டன. 1966 ஆம் ஆண்டின் கட்புலனுகாக் கணக்கினது சீர்கேட்டிற்கு, நன்கொடை வடிவத்தில் இலங்கைக்குச் செய்யப்படும் அரசகரும மாற்றல்களில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இன்னொரு முக்கிய காரணமாகும். அவற்றின் பெறுமானம் (ஐக்கிய அமெரிக்க பொதுச் சட்டம் 480தின் ரூபாய் மாற்றல்கள் உட்பட) 1965 ஆம் ஆண்டிற்குரிய 644 இலட்சம் ரூபாய்களிலிருந்து, 1966 ஆம் ஆண்டு 629 இலட்சம் ரூபாய்களுக்குக் குறைவுற்றது.

**அட்டவணை II (ஊ) 3**

**நடைமுறைக் கட்புலனுகாக் கணக்கு 1965, 1966.**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1965 | | | 1966 (தற்காலிகமானவை) | | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | பற்று | நிகர | வரவு | பற்று | நிகர |
| **சேவைகள்** ... | **198·5** | **167·6** | **+30·9** | **200·2** | **193·2** | **+ 7·0** |
| நாணயத்திற்கு அல்லாத தங்கம் (தேறிய) | — | 1·8 | − 1·8 | — | 1·8 | − 1·8 |
| போக்கு வரத்து ... | 116·4 | 25·6 | +90·8 | 116·6 | 26·4 | +90·2 |
| பிரயாணம் ... | 5·7 | 12·6 | − 6·9 | 6·5 | 15·9 | − 9·4 |
| முதலீட்ட வருமானம் | 13·4 | 28·8 | − 15·4 | 12·4 | 54·5 | − 42·1 |
| நேரடி முதலீடு ... | 1·1 | 4·3 | − 3·2 | 1·6 | 30·0 | − 28·4 |
| ஏனைய ... | 12·3 | 24·5 | − 12·2 | 10·8 | 24·5 | − 13·7 |
| அரசாங்கச் செலவு ... | 29·7 | 25·3 | − 4·4 | 26·6 | 21·3 | + 5·3 |
| ஏனைய சேவைகள் ... | 38·3 | 78·5 | − 40·2 | 38·1 | 73·3 | − 35·2 |
| **மாற்றல் கொடுப்பனவுகள்** | **72·0** | **31·3** | **+40·7** | **69·1** | **32·1** | **+37·0** |
| தனியார் மாற்றல்கள் | 7·6 | 31·3 | − 23·7 | 6·2 | 32·1 | − 25·9 |
| அரசகரும மாற்றல்கள் | 64·4 | — | +64·4 | 62·9 | — | +62·9 |
| மொத்தம் ... | 270·5 | 198·9 | +71·6 | 269·3 | 225·3 | +44·0 |

### (இ) அரசகரும வெளிநாட்டுப் பொறுப்புக்கள்

அரச கரும நீண்ட கால முதலின் பேரிலான இலங்கையின் தேறிய நிலை, 1965 ஆம் ஆண்டுக்குரிய 360 இலட்சம் ரூபா மிகையுடன் ஒப்புநோக்கும்பொழுது 1966 ஆம் ஆண்டில் 1690 இலட்சம் ரூபா* மிகையைக் காட்டியது. 1965 ஆம் ஆண்டில் 250 இலட்சம் ரூபாய்கள் கொண்டதொரு ஸ்டேர்லிங் கடன் தீர்க்கப்பட்டது. 1966 ஆம் ஆண்டு நீண்ட கால முதலின் மொத்த வரவுகள், 1990 இலட்சம் ரூபாய்களாக விளங்கின. இவை 800 இலட்சம் ரூபாய்கள் கொண்ட திட்டக் கடன்களையும், 1180 இலட்சம் ரூபாய்கள் கொண்ட பொருட்கடன்களையும் உள்ளடக்குவன. நீண்ட காலக் கணக்கின் மீதான இலங்கையின் மொத்த அந்நிய கடன் தற்பொழுது 9132 இலட்சம் ரூபாய்களாக இருக்கின்றது. இத்தொகையில், சர்வதேச நாணய நிதிக்குக் கொடுக்க வேண்டிய தொகை (ரூபாய்களில் கொடுக்க வேண்டிய சேவைக் கட்டணங்கள் தவிர்த்து) 2717 இலட்சம் ரூபாய்களாகும். 1966 ஆம் ஆண்டு பெறப்பட்ட நீண்ட கால முதல், நுகர்ச்சியினதும் முதலீட்டத்தினதும் தற்போதய தேவைகளைப் பூர்த்தி செய்யவும், முன்னர் ஒழுங்கு செய்யப்பட்ட திட்ட உதவி நியதிகளின் படி ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் வேலையைத் தொடர்ந்து செய்யவும், வேண்டிய நிதியீட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. 1966 ஆம் ஆண்டு பெறப்பட்ட பொருளுதவிக் கடன் இறக்குமதிகளில், ஏறக்குறைய யாவும் நடைமுறையிலிருக்கும் இயந்திர ஆற்றலைப் பராமரிக்கவும், கூடியளவிற்குப் பயன்படுத்தவும் தேவையான முதலீட்டப் பொருட்களையும் மூலப் பொருட்களையும் பெருமளவு கொண்டுள்ளன. 1966ம் ஆம் ஆண்டு பெறப்பட்ட திட்டக் கடன்கள், கிராண்ட்பாஸ் வெப்பநிலையத் திட்டம் (68 இலட்சம் ரூபாய்கள்) மஸ்கேலியா ஓயா பள்ளத்தாக்குத் திட்டம் (55 இலட்சம் ரூபாய்கள்), கண்டி நீர் விநியோகத் திட்டம் (10 இலட்சம் ரூபாய்கள்), புகையிரத நவீன அமைப்பு (62 இலட்சம்

*ஐக்கிய அமெரிக்க பொது சன்ச்சட்டம் 480இன் இணக்கிணை நிதிகளிலிருந்த ரூபாய் வெளியீடுகளும் உட்பட.

ரூபாய்கள்), துறைமுக அபிவிருத்தி (46 இலட்சம் ரூபாய்கள்), ஆகிய வேலைகளைத் தொடர்ந்து செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டன. அத்துடன் சீமெந்து, இரும்புப் பொருள், ஆகிய கூட்டுத்தாபனங்களுக்கான இயந்திரங்கள், எஃகுக் கூட்டுத்தாபனம், ரயர் கூட்டுத்தாபனம், மா அரைப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவை போன்ற அரசாங்க முயற்சிகளுக்குத் தேவையான தொலை பேசிச் சாதனங்கள், நாவாய்கள், ஏனைய இயந்திரங்கள் ஆகியனவற்றை இறக்குமதி செய்வதற்கும் திட்டக் கடன்கள் பயன்படுத்தப்பட்டன.

### அட்டவணை II (ஊ) 4

### இலங்கையினது மொத்த அரசகரும வெளிநாட்டுப் பொறுப்புக்கள் (1)

பத்து இலட்சம் ரூபாய்களில்.

| | முடிவில் வெளிநின்றவை | | |
|---|---|---|---|
| | 1965 | 1966 | மாற்றம் |
| 1. இலங்கை கொடுக்கவேண்டிய கொடுப்பனவு ஒப்பந்த நிலுவை | 0·7 | 30·2 | + 29·5 |
| 2. ச. நா. நிதியிலிருந்து பெற்ற எடுப்பனவுகள் ... | 181·3 | 271·7 | + 90·4 (2) |
| 3. ஸ்டேர்லிங் கடன்கள் ... | 83·3 | 83·3 | — |
| 4. ஏனைய எடுப்பனவு செய்யப்பட்டனவும் வெளி நின்றனவுமான அந்நிய கடன்கள் (3) ... | 389·5 | 439·6 | + 50·1 |
| 5. நல்லுறவுக் கூட்டுதவி (கொன்சோர்டியம்) (4) | — | 118·6 | +118·6 |
| 6. பின்போடப்பட்ட கொடுப்பனவுகள் (அரிசி) ... | 60·3 | 30·6 | — 29·7 |
| மொத்தம் ... | 715·1 | 974·0 | +258·9 |

1. வெளிநாட்டுச் செலாவணியில் கொடுபட வேண்டிய இப்பொறுப்புக்கள், ஐக்கிய அமெரிக்க பொதுசனச் சட்டம் 480இன் பயனாக எழுந்த நிதிகளின் நிலுவைகளையும், வர்த்தக வங்கிகளிலிருக்கும் வதிவற்றோர் கணக்குகளின் நிலுவைகளையும் உள்ளடக்கா. இத்தகைய நிலுவைகள், 1966ல் ரூபா 978 இலட்சத்திலிருந்து, ரூபா 411 இலட்சத்தால் ரூபா 567 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றன.
2. 1440 இலட்ச ரூபாய்கள் கொண்ட எடுப்பனவுகளையும், 536 இலட்ச ரூபாய்கள் கொண்ட முன்னைய எடுப்பனவுகளிலிருந்து பெற்ற மீளக்கொள்வனவுகளையும் உள்ளடக்கும்.
3. ச. பு. அ. வ., ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய சோவியத் சமத்துவக் குடியரசு ஒன்று, ஜெர்மன் சமஷ்டி குடியரசு (மேற்கு ஜெர்மனி), கனடா, போலந்து, பிரான்சு, யூகோசிலாவியா ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட கடன்களின் எடுப்பனவுகளை உள்ளடக்கும்.
4. ஐக்கிய அமரிக்கா, ஐக்கிய இராட்சியம், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு (மேற்கு ஜெர்மனி), ஜப்பான், இந்தியா கனடா ஆகியவற்றிலிருந்து 1965, 1966ஆம் ஆண்டுத் திட்டங்களின் கீழ் பெறப்பட்ட பொருள் உதவியை உள்ளடக்கும்.

1965 ஆம் ஆண்டைப்போல், 1966 ஆம் ஆண்டு யூனிலும், இலங்கை, ஒரு வருடத்திற்குச் செல்லுபடியாகக் கூடிய துணை நில் உடன்பாடொன்றைச் சர்வதேச நாணய நிதியுடன் ஏற்படுத்திக்கொண்டது. இலங்கை திடமான விலைகளுடன் கூடியவிகிதப் பொருளாதார வளர்ச்சியையும், கூடிய வளங்களின் முற்றான உபயோகத்தையும், உறுதி செய்ய முயன்றுகொண்டிருக்கும் காலத்தில் சென்மதி நிலுவைக்கு ஆதரவு அளிக்கும் நோக்குடன் இவ்விரண்டாவது துணை நில் உடன்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வுடன்பாட்டு நியதிகளின் கீழ், துணை நில் காலத்தில் 1190 இலட்சம் ரூபாய்கள் (அதாவது 250 இலட்சம் டொலர்கள்) கொண்ட தொகையை, தவணைக் கட்டணங்களாக எடுப்பனவுசெய்வதற்கு இலங்கைக்கு அனுமதியளிக்கப்பட்டது. நாணய நிதியுடன் செய்துகொண்ட முதலாம், இரண்டாம் துணை நில் உடன்பாடுகளின் கீழ், தனக்குக் கிடைக்கக்கூடிய பல்வேறு கடன் வசதிகளையும், 1966 ஆம் ஆண்டில் இலங்கை பயன்படுத்தியது. முதலாவது துணை நில் உடன்பாட்டு நியதிகளின்கீழான 357 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கடைசித் தவணைப் பணத்தை இலங்கை பயன்படுத்தவில்லை. ஏனெனில், இரண்டாவது துணை நில் உடன்படிக்கை முடிவாக்கப் பெற்றபொழுது, அதன்கீழ் மேலுங் கூடிய மொத்தத் தொகையான 1190 இலட்சம் ரூபாய்களை எடுப்பனவு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. 1966 ஆம் ஆண்டில் சர்வதேச நாணய நிதியி

லிருந்து பெற்ற மொத்தக் கடன்கள் 1440 இலட்சம் ரூபாய்களாக இருந்தன. இது, முதலாவது துணை நில் உடன் பாட்டு நியதிகளின் கீழ் பெற்ற 357 இலட்சம் ரூபாய்களான தொகையையும் உள்ளடக்கும். 1966 இன் இரண்டாம் அரையாண்டின்போது, இரண்டாவது துணை நில் உடன்பாட்டு நியதிகளின்கீழ் 893 இலட்சம் ரூபாய்களை மொத்தமாகக் கொண்ட கடன்கள் எடுக்கப்பட்டன. இக் காலத்தில் இலங்கையின் சென்மதி நிலுவையின் மீது பலமான அமுக்கங்கள் அதிகரித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், குறிப்பாகப் பிரதான வெளிநாட்டு நிதிச் சந்தைகளிலுள்ள வட்டிவிகிதங்களும் உயர்வுற்றுச் செல்லும்தன்மை காணப்பட்டவேளையில், ச. நா. நிதியிலிருந்து செய்த இவ்வெடுப்பனவுகள் மிக்க பிரயோசனமுள்ளனவாக விளங்கின.

இக்கடன்பாடுகளுடன், 1966 ஆம் ஆண்டு மாச்சில், ச. நா. நிதியில் இலங்கையின் அனுமதிப்பங்கு, 3713 இலட்சம் ரூபாய்களுக்கு (780 இலட்சம் டொலர்களுக்கு) மேலும் உயர்த்தப்பட்டமையால், கொடுப்பனவு செய்யவேண்டிய தங்கக் கட்டண உதவு தொகையை இறுப்பதற்காக, சர்வதேச நாணய நிதியிலிருந்து 190 இலட்சம் ரூபாய்கள் கொண்ட இன்னோர் தொகையும் பெறப்பட்டது. 1966 ஆம் ஆண்டின் போது, இலங்கை, சர்வதேச நாணய நிதிக்கு அந்நிய செலாவணியில் 536 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகையைத் திருப்பிக் கொடுத்தது. இத்தொகையில், 179 இலட்சம் ரூபாய்கள், 1961 ஏப்பிறல் மாதம் எடுத்த 538 இலட்சம் ரூபாக் கடன் தொகையின் இறுதித் தவணைப் பணத்தின் திருப்பிக் கொடுப்பனவாக உள்ளன. அத்துடன், 1962 பெப்புரவரியிற் பெற்ற 538 இலட்சம் ரூபாக் கடன் தொகையின் தொடர்பாக 357 இலட்சம் ரூபாக்களை மொத்தமாகக்கொண்ட இரு தவணைப் பணங்களையும் இத்தொகை உள்ளடக்கும். ஆகவே, விசேட எடுப்பனவாகிய 190 இலட்சம் ரூபாய்கள் உட்பட, 1966இல் சர்வதேச நாணய நிதியிலிருந்து இலங்கை பெற்ற கடன்பாடுகளின் தேறிய தொகை 904 இலட்சம் ரூபாய்களாகும். இது 1965 ற்குரிய 737 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடத்தக்கது. 1966 ஆம் ஆண்டின் இறுதியில், ச. நா. நிதியில், இலங்கையின் வெளிநின்ற கடன்பாடுகள் 2717 இலட்சம் ரூபாய்களாக இருந்தன.

**(ஈ) நாணயப் பிரதேசங்களின் படியும் பிரதான பிரதேசங்களின்படியுமான நடைமுறைக் கணக்கு.**

வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களில் டொலர் பிரதேசத்துடன் வழக்கமாகக் காணப்படும் மிகை, 1965 இன் 1609 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1966 இல் 1325 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றமைக்கு, ஏற்றுமதி வருமானங்கள் 246 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றதும், இறக்குமதிக் கொடுப்பனவுகள் 38 இலட்சம் ரூபாய்களால் உயர்ச்சியடைந்ததும் காரணங்களாக அமைகின்றன. ஐக்கிய இராச்சியத்தினுடனான கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட மிகை 1965 இன் 871 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1966 இல் 392 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்தது. அதேமாதிரியாக சீனாவினுடனான வர்த்தக மிகை, பிரதானமாக, இறக்குமதிகளில் 413 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பு ஏற்பட்டமையால், 1965 ஆம் ஆண்டிற்குரிய 567 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1966 இல் 69 இலட்சம் ரூபாய்களுக்குக் குறைவுற்றது. 1965 ஆம் ஆண்டில் சோவியத் குழு நாடுகளுடன் காணப்பட்ட 394 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மிகை, 1966 இல் 182 இலட்சம் ரூபாய்கள் கொண்ட குறையாக மாற்றமடைந்தது. இதற்கு, ஏற்றுமதி வருமானம் 490 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றதே பிரதான காரணமாக அமைகின்றது.

1966 ஆம் ஆண்டில் டொலர்ப் பிரதேசத்துடன் உள்ள மிகை, சிறிய அளவிற்கு வீழ்ச்சியடைந்தமை, உதவி உட்பாய்வினால் ஈடுசெய்யப்படவில்லை. இவ்வுதவிகளின் பெறுமானம் 1965 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 571 இலட்சத்திலிருந்து, 1966 ஆம் ஆண்டு ரூபா 695 இலட்சத்திற்குச் சிறிய அளவால் மட்டும் அதிகரித்தன. இதே மாதிரி சீனாவைப் பொறுத்தமட்டிலும் நடைமுறைக் கணக்கு மிகை, 1965 ஆம் ஆண்டின் ரூபா 567 இலட்

சத்திலிருந்து 1966 ஆம் ஆண்டில் ரூபா 69 இலட்சத்திற்குக் குறைவுற்றபோது, உதவியின் உட்பாய்வினுல் இவ்வீழ்ச்சி ஈடுசெய்யப்படவில்லை. இவ்வுதவிகளினது பெறுமானமும் உண்மையில் 1965ம் ஆண்டின் ரூபா 246 இலட்சத்திலிருந்து 1966 ஆம் ஆண்டு ரூபா 115 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றது. இதே கூற்று சோவியத் குழுவிற்கும் அமையத்தக்கதாயிருந்தது. இதற்கு மாறுக, ஐக்கிய இராச்சியத்துடன் உள்ள வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களின்மீதான நடைமுறைக் கணக்கு மிகை, 1965 ஆம் ஆண்டின் ரூபா 871 இலட்சத்திலிருந்து, 1966 ஆம் ஆண்டில் ரூபா 392 இலட்சத்திற்கு (ரூபா 479 இலட்சம் கொண்ட அந்நிய செலாவணி நட்டமாக) குறைந்தபோது, உதவி உட்பாய்வு 1965 ஆம் ஆண்டின் ரூபா 23 இலட்சத்திலிருந்து 1966 இல் ரூபா 325 இலட்சத்திற்கு (அல்லது ரூபா 302 இலட்சத்தால்) அதிகரித்தமையால் ஓரளவு ஈடுசெய்யப்பட்டது. இதேவிதமாக, இந்தியாவுடனுள்ள வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான நடைமுறைக் கணக்குக் குறையிலேற்பட்ட அதிகரிப்பு, உதவி உட்பாய்விலேற்பட்ட ரூபா 111 இலட்சம் கொண்ட அதிகரிப்பினுல் ஓரளவு ஈடுசெய்யப்பட்டது.

**(உ) வெளிநாட்டு ஒதுக்கு நிதிகள்**

1965ஆம் ஆண்டில், ஏற்பட்ட சாதகமான சென்மதி நிலுவையினுல் இலங்கை தனது மொத்த வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களை (ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதி தவிர்ந்த) ரூபா 4076 இலட்சம் கொண்ட ஒரு மிதமான அளவிற்கு (அல்லது இரண்டரை மாத, சராசரி இறக்குமதிகளுக்கு நிதியீட்டப் போதுமானளவு தொகைக்கு) அதிகரிக்க முடிந்தது. 1966 ஆம் ஆண்டில், நடைமுறைக் கணக்கிலும் மூலதனக் கணக்கிலுமெழுந்த கொடுப்பனவுகளின் அதிகரிப்புடன் இணைந்து, ஏற்றுமதி வருமானங்களும் கூர்மையாக வீழ்ச்சியுற்றமையால் இலங்கையின் வெளிநாட்டுக் கொடுப்பனவுகளாலான "அடிப்படை நிலுவை" சீர்கேடடைந்தது. இதன் பயனுக இலங்கையின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களை ரூபா 1220 இலட்சத்தாற் குறைத்து, ரூபா 2819 இலட்சத்திற்கு (அல்லது இரண்டு மாதத்திலும் குறைந்த இறக்குமதிகளுக்கு நிதியீட்டப் போதுமான தொகைக்கு) வீழ்ச்சியுறச்செய்ய நேரிட்டது. மேலும், இலங்கை தனது குறுகியகாலப் பொறுப்புக்களை ரூபா 750 இலட்சத்தால் அதிகரித்தது. இதற்கு மாறுக, 1965 ஆம் ஆண்டில் இலங்கை தனது வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களை (ஸ்டேர்லிங் கடன் ஆழ் நிதிகள் தவிர்ந்த) ரூபா 1029 இலட்சத்தாலதிகரித்தும், தனது குறுகியகாலப் பொறுப்புக்களை ஆக ரூபா 30 இலட்சத்தால் மட்டும் அதிகரித்தும் இருந்தது.

கூர்ந்து நோக்கின், 1965 ஆம் ஆண்டில் இலங்கை தன் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களை அதிகரித்ததும், குறுகியகாலப்பொறுப்புக்களை முடிந்த அளவிற் குறைத்ததுமான கொள்கை ஒரு சிறப்பு வாய்ந்த விடயமாகும். 1966 இல் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட எதிர்பாராத வீழ்ச்சிகளிலிருந்து எழுந்த கொடுப்பனவுப் பிரச்சினைகள், ஏற்றுமதி வருவாய்களிலும் கொடுப்பனவுகளிலும் மிகக் குறுகிய காலத்துள்ளே ஏற்படும் கூரிய ஏற்ற இறக்கங்கள், வர்த்தகத் துறையிலும், வங்கித் துறையிலும் ஏற்படும் வேலை நிறுத்தங்களாற் பொருளாதார முயற்சியிலேற்பட்ட தடைகள், ஆகியனவெல்லாம், 1965 ஆம் ஆண்டில் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களிலேற்பட்ட அதிகரிப்பிலும் பார்க்கக் கூடுதலான அளவுடைய தொகையால் இலங்கை தன் வெளிநாட்டு இருப்புச்சொத்துக்களை உயர்த்தவேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றன. உண்மையாகவே 1966 ஆம் ஆண்டில் இலங்கையின் வர்த்தகத்திலும் கொடுப்பனவுகளிலும் ஏற்பட்ட சம இன்மைக்கு நிதியீட்டம் செய்வதற்கு நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களோடு அந்நிய வங்கி மூலங்களிலிருந்தும் இலங்கை பல சமயங்களிற் கடன் எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 1966 ஆம் ஆண்டு ஒகத்து முதல் திசெம்பர் வரையான காலத்தில், வர்த்தகத் துறையின் வேலை நிறுத்தங்களின் பயனுல் இறக்குமதிகளின் வெளியேற்றம் தடைப்பட்டிருந்தமையைத் தொடர்ந்து சென்மதி நிலுவைகள் பலமான அமுக்கங்களுக்கு உட்பட்ட பொழுதிலேதான் இக் கடன்பாடுகள் குறிப்பாக அதிகரித்துக் காணப்பட்டன. இதற்கு மேலாக

அட்டவணை 11 (ஊ) 5

## நாணயப் பிரதேசங்களின்படி நடைமுறைக் கணக்கு நிலைமை

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | மொத்தம் | | | | | | வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1965 | | | 1966— தற்காலிகமானவை | | | 1965 | | | 1966 — தற்காலிகமானவை | | |
| | வரவு | பற்று | தேறிய | வரவு | பற்று | தேறிய | வரவு | பற்று | தேறிய | வரவு | பற்று | தேறிய |
| 1. டொலர் பிரதேசம் ... | 282·0 | 133·5 | +148·5 | 267·1 | 149·7 | +117·4 | 237·3 | 76·4 | +160·9 | 212·7 | 80·2 | +132·5 |
| 2. ஸ்டேர்லிங் பிரதேசம் ... | 1,022·9 | 1 029·3 | — 6·4 | 914·3 | 1 116·1 | —201·8 | 1 019·4 | 1 023·5 | — 4·1 | 909·3 | 1 067·9 | —158·6 |
| (i) ஐக்கிய இராச்சியம் ... | 567·2 | 482·4 | + 84·8 | 546·8 | 539·7 | +7·1 | 567·2 | 480·1 | + 87·1 | 546·4 | 507·2 | + 39·2 |
| (ii) இந்தியா ... | 54·1 | 161·5 | —107·4 | 25·8 | 164·8 | —139·0 | 54·1 | 161·5 | —107·4 | 25·8 | 153·7 | —127·9 |
| (iii) ஏனையவை ... | 401·6 | 385·4 | + 16·2 | 341·7 | 411·6 | —69·9 | 398·1 | 381·9 | + 16·2 | 337·1 | 407·0 | — 69·9 |
| 3. ஸ்டேர்லிங், டொலர், பிரதேசங்கள் அல்லாத பிரதேசங்கள் ... | 875·0 | 958·2 | — 83·2 | 761·8 | 982·0 | —220·2 | 858·8 | 879·5 | — 20·7 | 758·3 | 874·2 | —115·9 |
| (i) ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டுத் தாபனத்து நாடுகள்* ... | 193·5 | 288·1 | — 94·6 | 166·7 | 296·5 | —129·8 | 193·5 | 271·7 | — 78·2 | 166·7 | 242·6 | — 75·9 |
| (ii) சீனு ... | 193·8 | 146·6 | + 47·2 | 172·7 | 174·8 | — 2·1 | 178·7 | 122·0 | + 56·7 | 170·2 | 163·3 | + 6·9 |
| (iii) சோவியத்குழு ... | 204·7 | 191·0 | + 13·7 | 155·7 | 183·7 | — 28·0 | 204·7 | 165·8 | + 39·4 | 155·7 | 173·9 | — 18·2 |
| (iv) ஏனையவை ... | 283·0 | 332·5 | — 49·5 | 266·7 | 327·0 | — 60·3 | 281·9 | 320·5 | — 38·6 | 265·7 | 294·4 | — 28·7 |
| மொத்தம் ... | 2,179·9 | 2,121·0 | + 58·9 | 1,943·2 | 2,247·8 | —304·6 | 2,115·5 | 1,979·4 | +136·1 | 1,880·3 | 2,022·3 | —142·0 |

*ஆஸ்திரியா, பெல்ஜியம், டென்மார்க், பிராஞ்சு, ஜெர்மன் இணையாட்சிக் குடியரசு, கிறீஸ், இத்தாலி, நெதலன்ஸ், நோர்வே, போர்த்துக்கல், ஸ்பெயின், ஸ்வீடன், சுவித்செலாந்து ஆகிய நாடுகளை உள்ளடக்கும்.

**1966** ஆம் ஆண்டின் போது, இலங்கை தனது, கொடுப்பனவு ஒப்பந்தங்களின் கீழ் உள்ள பொறுப்புக்களையும் கிட்டத்தட்ட ரூபா **300** இலட்சத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு அக் காலத்தில் நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களின் மீதுள்ள அமுக்கத்தையும் ஓரளவு தளர்த்துவதற்குப் பயன்பட்டது.

**1965** ஆம் ஆண்டு யூன் மாதத்திலும், **1966**ம் ஆம் ஆண்டு யூன் மாதத்திலும் முறையே முடிவு செய்யப்பட்ட முதலாம், இரண்டாம் துணை நில் ஒப்பந்தங்களின் கீழ் **1966** ஆம் ஆண்டில் இலங்கை பல அந்நிய செலாவணித் தொகைகளை சர்வதேச நாணய நிதியிலிருந்து கடனாகப் பெற்றது. **1966** ஆம் ஆண்டு சனவரியில், முதலாம் துணை நில் ஒப்பந்தத்தின்கீழ் ரூபா **357** இலட்சம் கொண்ட தொகையைக் கடனாகப் பெற்றது. இதன்பின், இரண்டாவது துணை நில் ஒப்பந்தத்தின் கீழ், ரூபா **893** இலட்சம் கொண்ட மொத்தத் தொகைகள் எடுப்பனவு செய்யப்பட்டன. இதற்கு மேலாக, **1966** ஆம் ஆண்டு மாச்சு மாதத்தில் ரூபா **190** இலட்சம் கொண்ட வேறொரு விசேடத் தொகையும், சர்வதேச நாணய நிதியில் இலங்கையின் அனுமதிப் பங்கு ரூபா **3713** இலட்சத்திற்கு அதிகரிக்கப்பட்டதன் விளைவாக இலங்கையின் தங்கக் கட்டணத்தைக் கொடுப்பதற்காகச் சர்வதேச நாணய நிதியிலிருந்து எடுப்பனவு செய்யப்பட்டது. முந்தைய ஆண்டுகளிற் சர்வதேச நாணய நிதியிலிருந்து எடுக்கப்பட்ட தொகைகளின் பேரில் இவ்வருடம் திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகை ரூபா **536** இலட்சமாகும். எனவே முன்பு கூறப்பட்ட இரண்டு துணை நில் ஒப்பந்தங்களினூடாகவும் சர்வதேச நாணய நிதியிலிருந்து **1966** இல் பெற்ற கடன்களிற் தேறிய தொகை ரூபா **904** இலட்சமாகும். **1966** ஆம் ஆண்டில் சர்வதேச நாணய நிதியினால் இலங்கைக்கு அளிக்கப்பட்ட உதவி, திடமான விலைகளுடன் நாட்டின் பொருள் வளங்கள் பூரணமாக ஒன்று சேர்க்கப்பட்டு உபயோகிக்கப்படுவதற்காக முனையப்படுமோர் உறுதிப்பாட்டுத் திட்டம் கைகூடி அமைவதை நோக்கமாகக் கொண்டதாகும். **1966** ஆம் ஆண்டின் போது பொருளாதாரத்தைத் தீவிரமாகப் பாதித்த வெளிநாட்டுக் கொடுப்பனவுப் பிரச்சினைகள் தொடர்ந்தும் இயங்கிய சந்தர்ப்பத்தில், சர்வதேச நாணய நிதியிலிருந்து இலங்கை பெற்ற உதவி, இலங்கையின் கொடுப்பனவுப் பிரச்சினையைத் தணிக்கவும், வெளிநாட்டு ஒதுக்கு நிதிகளுக்குத் துணை கொடுக்கவும் பெருமளவு உபயோகமுள்ளதாய் விளங்கிற்று.